செ.வெ.எண்:1032 நாள்:30.12.09

# பத்திரிகை செய்தி

தமிழ்நாட்டின் துணித்தொழில் தேசிய மற்றும் மாநில பொருளாதாரத்தில் முக்கியமான பங்கு வகிக்கின்றது. இத்தொழில், நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்பு வழங்குவதில் விவசாயத்திற்கு அடுத்தபடியாக பொருளாதார வளர்ச்சியில் முக்கியத்துவம் வாய்ந்த தொழிலாக விளங்குகிறது. மாநிலத்தில் உள்ள 4.13 இலட்சம் கைத்தறிகளில் 2.38 இலட்சம் கைத்தறிகள் 1153 கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் கீழும், மீதமுள்ள 1.75 இலட்சம் தறிகள் கூட்டுறவு அல்லாத தனியார் அமைப்பிலும் இயங்கி வருவதன் மூலம் 6.08 இலட்சம் நெசவாளர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கப்படுகிறது. மாநிலத்தில் உள்ள 3.66 இலட்சம் விசைத்தறிகளில் 42,312 விசைத்தறிகள் 179 விசைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் செயல்பட்டு வருகின்றன.

கைத்தறி , விசைத்தறி மற்றும் துணித்தொழில் நெசவாளர்களின் குறைகளை முழுமையாக பகுத்தாய்வு செய்து அவற்றிற்கான தகுந்த தீர்வுகளை அரசுக்கு பரிந்துரை செய்யவும் மத்திய, மாநில அரசுகளால் நடைமுறைப்படுத்தப்படும் பல்வேறு திட்டங்களை ஆய்வு செய்யவும் கைத்தறி, விசைத்தறி மற்றும் துணித்தொழில் வளர்ச்சிக்கு ஏதுவான சூழ்நிலையை உருவாக்கவும், கைத்தறி தொழிலின் தனித்தன்மையை பாதுகாக்கவும், மாநில அளவிலான கைத்தறி மற்றும் துணித்தொழில் ஆலோசனைக்குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவின் தலைவராக மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித்தொழில் அமைச்சர் அவர்கள் உள்ளார்கள். இக்குழுவில் அலுவல் சார்ந்த உறுப்பினர்கள் பதினோரு பேரும் அலுவலல் சாரா உறுப்பினர்களாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவரும், சட்டமன்ற உறுப்பினர்கள் ஐவரும் தென்னிந்திய நூற்பாலைகள் இணையத்தின் தலைவரும் உள்ளனர். மேலும் 18 சரகங்களுக்கும் கைத்தறி பிரிவு, விசைத்தறி பிரிவு மற்றும் துணித்தொழில் பிரிவுகளுக்கான அலுவல் சாரா உறுப்பினர்களாக 39 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இக்குழுவின் முதல் கூட்டம் 26.4.2007 அன்று சென்னையிலும், இரண்டாவது கூட்டம் 26.11.2007 அன்று திண்டுக்கல் சரகத்திலும், மூன்றாவது கூட்டம் 26.9.2008 அன்று சென்னையிலும் நடைபெற்றது. ஆலோசனை குழு உறுப்பினர்களால் வழங்கப்பட்ட கருத்துகள், ஆலோசனைகள், பரிந்துரைகள் ஆகியவற்றின் மீது துறை தொடர்ந்து நடவடிக்கைகள் எடுத்து செயல்படுத்தி வருகிறது. இக்குழுவின் நான்காவது கூட்டம்

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலன் மற்றும் கைத்தறி துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் 30.12.2009 அன்று முற்பகல் 10.30 மணியளவில் சென்னை, எழும்பூர், சுகாதார மற்றும் குடும்ப நல பயிற்சி நிலையத்தில் முதல் தளத்தில் அமைந்துள்ள கூட்ட அரங்கில் நடைபெற்றது. இக் கூட்டத்தில் ஆலோசனை குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டு பல்வேறு ஆலோசனைகள் வழங்கியுள்ளனர்.

ஆலோசனைக்குழு உறுப்பினர்கள் தெரிவித்த பல்வேறு ஆலோசனைகளின் மீது உரிய துறை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலன் மற்றும் கைத்தறித்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள்.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9